DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF, NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | : | **O.S.125/2024** |
| **Deposition of witness for** | : | **Plaintiff** |
| **Serial No. of Witness** | : | **PW1** |
| **Name** | : | பொன்தாம்சன் |
| **Father's Name** | : | தங்கராஜா |
| **Village** | : | ஏர்வாடி |
| **Taluk** | : | நான்குநேரி |
| **Age** | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of day of 13.10.2025

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை.

நான் இவ்வழக்கு வாதியின் கணவர் ஆவேன். வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை எழுத்துமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. 13.09.1945 தேதியில் ஆசியா அம்மாள் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1, 31.01.2007 தேதிய அகமது மைதீன் பெயரில் ஏற்பட்ட ஜெனரல் பவர் பட்டா சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2, 12.02.2007 தேதியில் S.M.சாகுல்ஹமீது பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3, 12.02.2007 தேதியில் பொன்தாம்சன் பெயரில் ஏற்பட்ட ஜெனரல் பவர் பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4, 16.02.2007 தேதியில் S.M.சாகுல் ஹமீது என்பவரின் பவர் ஏஜெண்ட் மூலம் ஏற்பட்ட கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5, 16.07.2007 தேதியில் வாதி A.M.பீர் முகம்மது என்பவரிடம் கிரையம் பெற்ற கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6, அ.வ.எண்.76/2007 வழக்கில் இவ்வாதி தாக்கல் செய்துள்ள எதிர்கோரிக்கை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7, வ.ம.எண்.66/2017 ன் அ.வ.எண்.76/2007 ன் மனுவில் பிறப்பிக்கப்பட்ட 03.02.2017 தேதிய உத்தரவு வா.சா.ஆ.8, வ.ம.எண்.66/2017 ன் அ.வ.எண்.76/2007 ன் மனுவில் பிறப்பிக்கப்பட்ட 03.02.2017 தேதிய உத்தரவாணை வா.சா.ஆ.9, அ.வ.எண்.76/2007 வழக்கின் 27.03.2017 தேதிய தீர்ப்புரை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.10, அ.வ.எண்.76/2007 வழக்கின் 27.03.2017 தேதிய தீர்ப்பாணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.11. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான

ஆவணங்களில் அசல் ஆவணங்கள் அ.வ.எண்.76/2007 வழக்கின் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் சான்றிட்ட நகல் தாக்கல் செய்துள்ளேன். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணைக்காக வேண்டி வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.